## மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், வானூர்.

திரு.பொன்வேந்தன், பி.டெக், எம்.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி அவர்களால் உறுதி மொழி சட்டம் பிரிவு 105-வது ஏற்பாட்டின்படி ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர் | - | திரு. செல்வராசு | அசல் வழக்கு எண். | 14/2017 |
| த/பெ. | - | ராமசந்திரன் | பி.சா. | 1 |
| கிராமம் | - | | | |
| வட்டம் | - | | | |
| தொழில் | - | | | |

14.11.2025.

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை:**

1. வழக்கு சொத்துக்கள் உட்பட சர்வே எண்.278 ல் உள்ள சொத்துக்கள் ஆதியில் மாணிக்கம் படையாச்சிக்கு உரிமையானது என்றால் சரிதான். சர்வே எண்.278 ல் உள்ள சொத்துக்களை அனுபவித்து வந்து யாருக்கு கொடுத்தார் என்றால் கோவிந்தராஜ் என்பவருக்கு 1956 ல் கிரையம் கொடுத்தார். கோவிந்தராஜ் கவுண்டர் எனக்கு என்ன உறவுமுறை என்றால் என்னுடைய தாத்தா. கோவிந்தராஜ் அனுபவம் செய்து வந்து இறந்துவிட்டார் என்றும் அவருடைய ஒரே வாரிசு என் அப்பா ராமசந்திரன் என்றால் சரிதான். என் அப்பா ராமசந்திரன் என்பவருக்கு வாதி ராமதாஸ், நான் மற்றும் பிரகாஷ் ஆகிய மூவரும் வாரிசுகள் என்றால் சரிதான், அக்கா வசந்தா என்பவரும் வாரிசு. தற்போது பிரகாஷ் இறந்துவிட்டார் என்றால் சரிதான். அவருடைய மகள் பெயர் கீர்த்தனா.

2. என் அப்பாவிற்கு பாத்தியப்பட்ட அனைத்து சொத்துக்களையும் வா.சா.ஆ.2 ஆவணத்தின் படி அவருடைய வாரிசுகள் அனைவரும் பிரித்துக்கொண்டோம் என்றால் சரிதான். வா.சா.ஆ.2 ஆவணத்தில் அ அட்டவனை சொத்து எனது தகப்பனாருக்கும், 'பி' அட்டவனை சொத்து வாதிக்கும், 'சி' அட்டவணை சொத்து எனக்கும், 'டி' அட்டவணை சொத்து கீர்த்தனா என்பவருக்கும் ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான். வா.சா.ஆ.2 ஆவணத்தின் படி பாகம் பிரிப்பதற்கு முன்பு எந்த வழி பிரச்சனையும் இல்லை என்றால் சரிதான். பாக பிரிவினைக்கு முன்பு ஒவ்வொரு நிலத்திற்கும் சென்று வருவதற்கு வரப்பு வழியாக மாமூலமாக சென்று வந்தோம் என்றால் சரிதான். வழக்கு சொத்துக்கள் உட்பட இதர சொத்துக்களிலும் முந்தரி மரங்கள் தான் உள்ளது என்றால் சரிதான். முந்திரி மரங்களை நான் நேரடியாகவும் விற்பனை செய்துள்ளேன் என்றும் குத்தகைக்கு விட்டும் விற்பனை செய்துள்ளேன் என்றால் சரிதான். அறுவடைக்கு முன்பு ஏறு ஓட்டுவதற்கும்,

மருந்து தெளிப்பதற்கும் அனைவரும் போக்குவரத்து செய்து கொண்டு தான் இருந்தோம் என்றால் சரிதான். வழி பிரச்சனை 2017 ல் தான் ஏற்பட்டது என்றால் சரிதான்.

3. நான் சொல்லி தான் என் எதிர்வழக்குரை தயார் செய்யப்பட்டது என்றால் சரிதான். வழக்கு சொத்திலுள்ள அ அட்டவணை சொத்தை பொறுத்து வாதி எந்த பரிகாரமும் கோரவில்லை என்றால் சரிதான். 'பி' அட்டவணை சொத்தில் தான் வசதி உரிமை பரிகாரம் கோரியுள்ளார் என்றால் சரிதான். 2ம் பிரதிவாதி எனது மனைவி என்றால் சரிதான். தற்போது என்னிடம் காட்டப்படும் எதிர்வழக்குரையில் பக்கம் 3ல் பத்தி 6ல் " 'பி' அட்டவணை சொத்தானது வாதிக்கு சர்வ சுதந்தர பாத்தியமான சொத்து " என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். என்னுடைய பிரமாண வாக்குமூலமும் நான் சொல்லி தயார் செய்யப்பட்டது என்றால் சரிதான். என் பிரமாண பத்திரிக்கையில் 5வது பத்தியில் " தாவா 'பி' அட்டவணை சொத்து இந்த வாதிக்கு சர்வ சுதந்திர பாத்தியமான முழு உரிமையான சொத்தாகும் " என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வாதியின் 'அ' அட்டவணை சொத்திற்கு செல்வதற்கு தனி வழி உள்ளதாக குறிப்பிட்டுள்ள நிலையில் எந்த சொத்தின் வழியாக செல்ல முடியும் என்றும் அதன் சர்வே எண் என்னவென்று நான் பிரமாண பத்திரிக்கையில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். 'அ' அட்டவணை சொத்து மற்றும் அதனை சுற்றியுள்ள சொத்துக்களை வாதி விற்பனை செய்து விட்டதாக சொல்லியுள்ள நிலையில் அதற்கு ஆதரவாக கிரைய ஆவணங்களை தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

4. பொதுவாக பாக பிரிவினை பத்திரத்தில் பொது வழி பற்றி குறிப்பிட்டு இருந்தாலும் குறிப்பிடாமல் இருந்தாலும் தரப்பினர்கள் ஒருவருக்கொருவர் வழி விட வேண்டும் என்பது தான் இயற்கை விதி என்றால் சரியல்ல. நீதிமன்ற ஆணையர் வழக்கு சொத்துக்களை பார்வையிட்டார் என்றால் சரிதான், நான் உடன் இருந்தேன். நீதிமன்ற ஆணையர் தாக்கல் செய்த அறிக்கை மற்றும் வரைபடத்திற்கு ஆட்சேபனை தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நீதிமன்ற ஆணையரின் அறிக்கை மற்றும் வரைபடத்தை எனது வழக்கறிஞரிடமிருந்து பெற்று தெரிந்துகொண்டேன் என்றால் சரிதான். தற்போது என்னிடம் காட்டப்படும் நீதிமன்ற ஆணையர் வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுளள E, I, J, K பகுதி வாதிக்கு பாத்தியப்பட்ட இடம் மற்றும் முந்திரி உடைக்கும் கம்பெனி என்றால் சரிதான். வாதிக்கு பாத்தியப்பட்ட இடத்திற்கு வரவேண்டும் என்றால் ஆணையர் வரைபடத்தில் குறிப்பிட்டுள்ள A, C, E, F, G, D, B வழியாக தான் வர முடியும் என்றால் அந்த வழியாகவும் வரலாம் வேறு வழியாகவும் வரலாம். நீதிமன்ற ஆணையர் வரைபடத்தில் E, I, J, K பகுதிக்கு வருவதற்கு A, C, E, F, G, D, B வழியை தவிற வேறு வழியை குறிப்பிட்டுள்ளாரா என்றால் இல்லை.

5. நீதிமன்ற ஆணையர் வழக்கு சொத்தை பார்வையிட்ட போது E, I, J, K பகுதிக்கு வருவதற்கு வேறு பாதை உள்ளது என்று நீதிமன்ற ஆணையரிடன் புல தணிக்கையின் போது குறிப்பு ஏதேனும் கொடுத்தேனா என்றால் இல்லை. நீதிமன்ற ஆணையர் தாக்கல் செய்த அறிக்கை மற்றும் வரைபடம் தவறு என்று சொல்லி புதியதாக நீதிமன்ற ஆணையரை நியமித்து வழக்கு சொத்தை பார்வையிட நான் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரிதான். 'பி' அட்டவணையின் சக்குபந்தி எனக்கு தெரியாது என்றால் சரிதான். வாதிக்கு உரிமையான சொத்தின் சக்குபந்தி தெரியுமா என்றால் எனது பாகத்திற்கு தெற்கு, மேற்கு, விசாலாட்சி நிலத்திற்கு வடக்கு, கண்ணையன் செல்வராசு பாகத்திற்கு கிழக்கு. விசாலாட்சி மற்றும் கண்ணையன் உறவினர்கள் கிடையாது என்றால் சரிதான். விசாலாட்சி மற்றும் கண்ணையன் பூமிகளில் முந்திரி உள்ளது என்றால் விசாலாட்சி இடத்தில் தென்னை மரங்கள் உள்ளது, விசாலாட்சி இடத்தை வாதி கிரையம் வாங்கிவிட்டார், கண்ணையன் இடத்தில் முந்திரிகள் உள்ளது. விசாலாட்சி இடத்தை வாதி கிரையம் வாங்கிவிட்டதா என் எதிர்வழக்குரையில் சொல்லவில்லை என்றும் அதற்கான ஆவணங்களை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். பாக பிரிவினையில் வழி பற்றி குறிப்பிடவில்லை என்பது தான் இவ்வழக்கில் என்னுடைய ஆட்சேபனை என்றால் சரிதான்.

6. வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பே வாதியின் சொத்தில் முந்திரி உடைக்கும் கம்பெனியை கட்டி வந்தார் என்றால் சரிதான், ஆனால் கட்டி முடிக்கவில்லை. அதற்கான கட்டுமான பொருட்கள் அனைத்தும் 'பி' அட்டவணை சொத்தின் வழியாக தான் எடுத்து செல்லப்பட்டது என்றால் சரிதான், நான் எடுத்து செல்ல வேண்டாம் என்று சொன்ன பிறகும் அவர் எடுத்து சென்றார். வாதி முந்திரி உடைக்கும் கம்பெனியை கட்டியதால் போறாமை கொண்டு வழிவிடாமல் இடையூறு செய்ததால் தான் வாதி இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு வரை பி அட்டவணை சொத்து பொது வழியாக தான் பயன்படுத்தப்பட்டு வந்து 'அ' அட்டவணை சொத்தை வாதி அனுபவித்து வந்தார் என்றால் சரியல்ல. 'அ' அட்டவணை சொத்திற்கு செல்வதற்கு 'பி' அட்டவணை சொத்தை தவிற வேறு வழி எதுவும் இல்லை என்றால் சரியல்ல. வழக்கு வாதி கோரியவாறு அனுமதிக்கத்தக்கது என்றால் சரியல்ல.

Taken down by me in the presence of the withess read over to the witness, and admitted by him/her to be correct.

PONVENTHAN D

Digitally signed by PONVENTHAN D
Date: 2025.11.14 16:54:48 +0530

District Munsif

Vanur.